
# சிலுவையிலறையப்பட்ட, உயிர்த்தெழுந்த, மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்து - 06

*வேத வசனம் : மத். 7:15; 16:16-17, 21; 20:28; யோவான் 1:29; அப். 2:32-33; ரோமர் 3:26; 4:25; 5:8; 6:1-11; 8:17; 1 கொரி. 1:23-25; 15:45, 47; 2 கொரி. 5:19, 21; கலா. 2:20; 3:13; எபே. 1:20-23; 2:1-10; கொலோ. 1:18; 3:3-4; எபி. 2:9; 9:14, 22; 1 பேதுரு 2:24; 3:18; 1 யோவான் 4:1-6; வெளி. 3:21; 14:12; ஏசாயா 53:6*




**தேவனுடைய அடித்தளத்தின் முக்கியமான பகுதிகள்**

நாம் இப்போது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவைமரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், மகிமைப்படுத்தப்படுதல் ஆகியவைகளைப்பற்றிப் பார்க்கப்போகிறோம். இந்த நிகழ்ச்சிகளுக்கு நான்கு நற்செய்திகளிலும் எவ்வளவு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், இவைகளின் பொருளை விளக்குவதற்கு முழுப் புதிய ஏற்பாட்டிலும் எவ்வளவு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இதிலிருந்து இந்த நிகழ்ச்சிகள் எவ்வளவு முக்கியமானவை என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். இவைகள் தேவனுடைய அடித்தளத்தின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

**ஆவிகளைப் பகுத்துணர்தல்**

கள்ளத் தீர்க்கதரிசிகள் மலிந்துகிடக்கும் இந்த நாட்களில் "சத்தியத்தின் ஆவி" எது, "அசத்தியத்தின் ஆவி" எது என்று நாம் எளிதாகக் கண்டுபிடித்துவிடலாம். இவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை, மரணம், இரத்தம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், உயர்த்தப்படுதல், இரண்டாம் வருகை ஆகியவைகளை எவ்வளவு அதிகமாகக் குறிப்பிடுகிறார்கள் என்பதை வைத்து அவர்களுடைய ஆவியை நாம் எளிதில் இனங்கண்டுகொள்ள முடியும். இந்தக் காரியத்தில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். கிறிஸ்துவாகிய நபரைக்குறித்து எப்படித் தவறான கருத்துக்களும், வேதப்புரட்டுகளும் இருக்கின்றனவோ, அதுபோலவே அவருடைய சிலுவை, உயிர்த்தெழுதலைக்குறித்தும் தவறான கருத்துக்களும், வேதப்புரட்டுகளும் இருக்கின்றன.

***உண்மையான கிறிஸ்தவம்***

இன்று 'கிறிஸ்தவத்தில்' புதிய ஏற்பாட்டுக்கு முற்றிலும் முரணான ஏராளமான பொய்யான கருத்துக் களும், கோட்பாடுகளும் உள்ளன. பொதுவாக "கிறிஸ்தவம்" என்று எல்லாராலும் அழைக்கப்படுகிற 'கிறிஸ்தவ மதமும்', அதைப் பின்பற்றுபவர்களும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்திற்கும், "இயேசுவின் விசுவாசத்திற்கும்", தேவனால் மறுபடி பிறந்த அவருடைய பிள்ளைகளுக்கும் முற்றிலும் முரணாகவே இருக்கின்றார்கள். உண்மையான கிறிஸ்தவம் ஒரு 'மதமே' இல்லை. 'இந்த உலகத்து மதங்களெல்லாம்' இங்கு இந்தப் பூமியில் தோன்றியதுபோல, கிறிஸ்தவம் இந்தப் பூமியில் தோன்றவில்லை, பிறக்க வில்லை. இயேசு கிறிஸ்துவில் உண்மையான தேவன் 'வெளிப்படுவதே' உண்மையான கிறிஸ்தவம்; அது பரலோகத்திலிருந்து இறங்கிவந்தது.

சிலுவையின் அவசியம்

சிலுவையில் என்ன நிகழ்ந்தது? ஏன் அது அவசியம்? '*சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து*' – ஏன் இதுவே கிறிஸ்தவ நற்செய்தியின் இருதயம்? பின்வரும் அதிகாரங்களில் நாம் இதை விவரமாகப் பார்ப்போம். இப்போதைக்கு, இரண்டு முக்கியமான குறிப்புகளை மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம்.

**1. நம் பாவத்தின் விளைவுக்கான தீர்வு**

முதலாவது, நாம் செய்த செயலால் ஏற்பட்ட பிரச்சினையை அவர் தீர்த்தாக வேண்டும். நாம் கலகக் காரர்கள், குற்றம்புரிந்த பாவிகள், சட்டத்தை மீறியவர்கள். தேவன் தம் சட்டத்தை நிலைநிறுத்தவும் வேண்டும்; அதே நேரத்தில் அவருடைய சட்டங்களை மீறியவர்களுக்கு மன்னிப்பும் வழங்க வேண்டும். இது எப்படி சாத்தியம்? அவர் எப்படி ஒரே நேரத்தில் "நீதிபரராகவும்" பாவிகளை "நீதிப்படுத்துகிற வராகவும்" இருக்க முடியும்? அவருடைய ஆச்சரியமான தீர்வு என்ன தெரியுமா?

அவர் நமக்கு மரணதண்டனையை வழங்கினார்; அவர் நம்மை அவருடைய பிரசன்னத்திலிருந்து துரத்திவிட்டார். அவருடைய பரிசுத்தமும் நீதியும் இவைகளைக் கோருகின்றன. அவர் இப்படித்தான் செய்தாக வேண்டும். அதன்பின், அவர் தம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாகிய நபரில் அந்தத் தண்டனையை அவரே ஏற்றுக்கொண்டார். "*நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.*" "*கிறிஸ்து நமக்காகச் சாபமாகி...நம்மை... மீட்டுக் கொண்டார்.*" "*கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.*" "*அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்.*" "கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி, அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களி னிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்."

***கிறிஸ்து நம் பதிலீடு***

நாம் பாவத்தை மிகச் சாதாரணமாக, மேம்போக்காக, எடுத்துக்கொள்கிறோம். நாம் தேவனுடைய பரிசுத்தத்தையும், அவர் பாவத்தை எந்த அளவுக்கு அருவருத்து வெறுக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். "தேவன் நம்மில் அன்புகூருகிறார்; எனவே, அவர் நம்மை மன்னித்து விட்டுவிடுவார்; கடைசியாக, எல்லாரும் பரலோகத்துக்குப் போய்விடுவோம்," என்று சில கள்ளத் தீர்க்கதரிசிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், வேதாகமம் அப்படிச் சொல்ல வில்லை; இந்தக் கள்ளத் தீர்க்கதரிசிகள் சொல்வதற்கு முற்றிலும் முரணாகவே வேதாகமம் சொல்லு கிறது. பாவிகளுடைய பாவங்கள் தண்டிக்கப்பட்டுவிட்டதால் மட்டுமே தேவனால் பாவிகளை மன்னிக்க முடியும், மன்னிப்பார். குற்றம் புரிந்த பாவிகளை அப்படியே விட்டுவிட முடியாது. இயேசு கிறிஸ்து நமக்காக மரிக்காதிருந்தால், அவர் நம் பதிலீடாக மரிக்காதிருந்தால், ஒருவனும் பரலோகத்துக்குப் போக முடியாது. அவர் "*தேவ ஆட்டுக்குட்டியாக*' மரிக்க வேண்டியிருந்தது. "*அவருடைய இரத்தம் சிந்துதல் இல்லாமல்*" நமக்குப் "பாவமன்னிப்பு" கிடையாது. நாம் என்னவாக இருக்கிறோமோ, நாம் என்ன செய்தோமோ அதன் விளைவுகளை அவர் சிலுவையில் சுமந்தார். நாம் அவருடைய நீதியில் அவரோடு ஒன்றாயிருக்குமாறு நம் பாவங்களில் அவர் தம்மை நம்மோடு அடையாளப்படுத்திக் கொண்டார். "*அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப் படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.*"

*ஆனால், நம் பாவங்களுக்காகத் தேவன் இயேசுவை ஒரு மூன்றாவது நபரைத் தண்டிப்பதுபோல் தண்டிக்கவில்லை. யாருக்கு எதிராகக் குற்றம்புரிந்தோமோ, அந்த தேவனே தம் நீதியுள்ள சட்டங்களை நிலைநிறுத்துவதற்காக, கிறிஸ்துவில் சிலுவையிலே நம் பாவங்களின் விளைவுகளைச் சுமந்து உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். பிதா, குமாரன், ஆவியானவர் எல்லாரும் சிலுவையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆழமான பரம்புதிர். ஓர் அற்புதமான சத்தியம். இப்படிப்பட்ட அன்பையும் இரட்சிப்பையும் அசட்டைசெய்பவர்களுக்கு, புறக்கணிப்பவர்களுக்கு, என்ன நம்பிக்கை இருக்க முடியும்?*

**2. நம் பாவமான நபருக்கான தீர்வு**

*இரண்டாவது, நாம் திராணியற்ற, ஆற்றலற்ற, குணப்படுத்தமுடியாத பாவிகள் என்ற முறையில் நாம் என்னவாக இருக்கிறோமோ அந்தப் பிரச்சினையை அவர் தீர்க்க வேண்டியிருந்தது. நம்மில் பாவம் இருக்கிறது. அது நம்மைத் துளைக்கிறது; நம்மால் அதை ஒன்றும் செய்யமுடியவில்லை. இந்தக் காரியத்தில் தேவன் என்ன செய்ய வேண்டியிருந்தது? "கிறிஸ்து நமக்காக மரித்ததினால்' அவர் நம்மை மன்னித்துவிட்டு, அதன்பின் ஒன்றும் செய்யாமல் அவர் நம்மை அப்படியே இன்னும் பாவத்தின் அடிமைகளாக விட்டிருந்தால், அது தீர்வாக இருந்திருக்காது. பாவம் செய்ததினால் எழுந்த குற்றத்திலிருந்து மட்டும் நமக்கு இரட்சிப்பு கிடைத்தால் போதாது; பாவப் பிடியிலிருந்தும், பாவப் புற்றுநோயிலிருந்தும் நமக்கு இரட்சிப்பு தேவை.*

*நாம் எப்படியோ ஒரு விதத்தில் மரித்து, ஒரு புதிய உயிரோடு எழுந்து, மீண்டும் வாழ தொடங்கினால் எப்படி இருக்கும்! அந்தப் புதிய உயிர் அழியாத, அழிக்கப்படமுடியாத, பாவம் செய்வதற்கு ஆற்றலற்ற, உயிராக இருக்க வேண்டும். அதுதான் தீர்வாக இருக்க முடியும். தேவன் பிரச்சினையை சிலுவையில் இப்படித்தான் தீர்த்தார். அவர் சிலுவையில் இதைத்தான் துல்லியமாகச் செய்துமுடித்தார். விழுந்துபோன இந்த இனத்தைத் தேவன் தம் குமாரனின் மரணத்தில் மரணத்திற்குள்ளாக்கினார்; அவருடைய உயிர்த்தெழுதலில் ஒரு புதிய தொடக்கத்தை உண்டாக்கினார். இந்தப் பாவிகளின் இனத்துக்கு அவர் முடிவுகட்டினார். தன்மையின்படி நாம் எப்படிப்பட்ட மக்களாக இருக்கிறோமோ அதை அவர் முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார். விழுந்துபோன இந்த இனத்துக்கு எந்த எதிர்காலமும் கிடையாது. இந்த உண்மையை நாம் எதிர்கொள்ள விரும்பவில்லை; இந்த உண்மை நமக்கு இனிமையானதாக இல்லை; ஆனால், இதுதான் உண்மை.*

**கிறிஸ்து நம் பதிலாள்**

*இயேசு கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்து, அவர் தம்மை நம்மோடு அடையாளப்படுத்திக்கொண்டார்; ஆதாம் இனத்தின் கடைசி நபராக அவர் சிலுவையில் மரித்தார்; அவர் முழு இனத்தையும் தம்மில் ஒன்றாகக் கூட்டிச்சேர்த்துக்கொண்டு மரித்தார். அவர் மரித்தபோது முழு இனமும் அவரில் இருந்தது. எனவே, தேவனுடைய கண்ணோட்டத்தில், அவர் மரித்தபோது, நாமெல்லாரும் அவரில் மரித்தோம். நமக்குப்பதிலாக, நம் பதிலாளாக, "அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவர்' மரித்ததால் நாம் மன்னிப்பைப் பெறுவது சாத்தியமாயிற்று. அவர் நம் பிரதிநிதியாக மரித்ததால், தன்மையின்படி நாம் என்னவாக இருக்கிறோமோ அதிலிருந்து நாம் விடுதலைப் பெறுவது சாத்தியமாயிற்று. எனவே, பவுல் தன்னைப்பற்றி "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்...கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்," என்றும், கிறிஸ்தவர்களைப்பற்றி, "நீங்கள் மரித்தீர்கள்; உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது," என்றும் சொல்லுகிறார்.*

**கடைசி ஆதாம், இரண்டாம் மனிதன்**

*சிலுவையின் இந்த இரண்டு அம்சங்களும் பிரிக்கமுடியாதவாறு எப்போதும் சேர்ந்தே இருக்கின்றன. "கிறிஸ்து நமக்காக மரித்தார்," என்று மட்டும் எழுதப்படவில்லை; "நாமும் கிறிஸ்துவுடனேகூட மரித்தோம்," என்றும் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் நாம் அவரோடு ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறோம். அவர் "கடைசி ஆதாமாக" மரித்து, புறக்கணிக்கப் பட்ட ஆதாமின் இனத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார்; "தமக்குள்ளாக ஒரு புதிய மனிதனைப் படைக்க" "இரண்டாவது மனிதனாக", அதாவது ஒரு புதிய இனத்தின் முதல் நபராக, அவர் உயிர்த்தெழுந்தார்.*

இப்போது அவர் உயிர்த்தெழுந்து, மகிமைப்படுத்தப்பட்டவராக, "*மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டவராக*", பிதாவானவர் மனிதனுக்காகத் தீட்டியிருந்த திட்டங்களையெல்லாம் செய்து முடித்தவராக, வீற்றிருக்கிறார்; அவர் இப்போது, வானம் பூமி நரகம் ஆகியவைகளின் எல்லாத் "*துரைத்தனத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் மேலாய்*" வெற்றிவாகை சூடியவராக, உயிர்த்தெழுந்த கர்த்தரும், இரட்சகருமாக, பிரபஞ்சத்தின் சிங்காசனத்தில் பிதாவின் வலதுபக்கத்தில் வீற்றிருக்கிறார். அவரே அவருடைய சபையின் உயிருள்ள தலையாக அமர்ந்திருக்கிறார்; அவருடைய சபை அவருடைய உயிர்த்தெழுதலையும், உயர்த்தப்படுதலையும் அனுபவிக்குமாறு பிதாவானவர் வாக்குத்தத்தம் செய்த கொடையாகிய பரிசுத்த ஆவியானவர்மூலம் அவர் சபைக்குத் தம் ஜீவனைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். நாம் "*தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே*". இவ்வாறு, கிறிஸ்தவர்கள் இப்போது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம், உயிர்த்தெழுதல், உயர்த்தப்படுதல் ஆகியவைகளில் அவருடன் ஒன்றாக இருக்கிறார்கள்; அவருடைய இரண்டாம் வருகையிலும், வரப்போகிற அவருடைய ஆளுகையிலும் அவருடன் ஒன்றாக இருப்பார்கள்.

"*தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரைக் கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?*" (ரோமர் 8:32).

"*எல்லாம் உங்களுடையதே...நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்*" (1 கொரிந்தியர் 3:21-23).